# சிதம்பரம் நகராட்சி



## 2021 ம் ஆண்டு ஐப்பசி திங்கள் 12–ம் நாள் 29.10.2021 வெள்ளி கிழமை காலை 10.30 மணியளவில் நடைபெறும் சாதாரண நகர்மன்ற கூட்டம் நடைபெறும்

## மன்றக்கூட்டப் பொருள்

**1)** சிதம்பரம் நகராட்சி 15.06.1998–லிருந்து தேர்வு நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. 4.82 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட இந்நகராட்சியில் மொத்தம் 33 வார்டுகள் அமைந்துள்ளன. வழிபாட்டு தளம் என அழைக்கப்படும் இந்நகரம் இந்தியாவின் மிக முக்கியமான சுற்றுலா தளமுமாக விளங்குகிறது. தற்போதைய இந்நகராட்சியின் மொத்த மக்கள்தொகை 64500 இருந்தாலும் ஒரு சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் 13381 நபர்கள் வசித்து வருகிறார்கள்.இந்நகராட்சியில் 54.756 கிமீ நகராட்சி சாலையும், 8.870 கிமீ நெடுஞ்சாலைத்துறை சாலைகளும் ஆக மொத்தம் 62.386 கிமீ சாலைகள் உள்ளது.

இந்நகருக்கு தினசரி வந்து செல்லும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 25000–க்கு மேல் உள்ளது.மேலும், நடராஜர் கோயில் தேர்திருவிழா காலங்களில் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை தினசரி 50000 மேல் உள்ளது.

இந்நகராட்சி பகுதியில் கீழ்கண்டவாறு தெருவிளக்குகள் அமைந்துள்ளன.

| | | |
|---|---|---|
| 1 | 40 வாட்ஸ் குழல் விளக்குகள் | 1278 |
| 2 | 20 வாட்ஸ் CFL விளக்குகள் | 14 |
| 3 | 35 வாட்ஸ் CFL விளக்குகள் | 18 |
| 4 | 45 வாட்ஸ் CFL விளக்குகள் | 36 |
| 5 | 85 வாட்ஸ் CFL விளக்குகள் | 130 |
| 6 | 250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் | 405 |
| 7 | HML | 15 |
| | மொத்தம் | 1896 |

இந்நகர் வணி மையமாக மாறிவருவதால் சுற்றுபுற கிராம மக்கள் இந்நகருக்கு குடி பெயர்ந்து வருவதாலும் அண்ணாமலை பல்கலைகழகத்தில் பயில வரும் மாணவர்களின் தங்குமிட வசதிக்கு அடுக்குமாடி குடியிருப்புகள் பெருகுவதோடு நகரில் கட்டிடமில்லா காலியிடங்கள் அரசின் அனுமதிபெற்ற வரையறுக்கப்பட்ட மனை பிரிவுகளாக மாறி வருகின்றன.

இந்நகரின் பொதுமக்கள் இரவுநேர போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு நலனுக்காக அடிப்படை வசதியான தெருவிளக்கு வசதி 62.386 கிமீ சாலைக்கு 1896 தெருவிளக்குகள் மட்டுமே அமைக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றன. அரசின் நெறிமுறைபடி 30 மீட்டர் இடைவெளிக்கு ஒரு தெருவிளக்கு அமைக்கப்படவேண்டும். இந்நகரின் பிரதான போக்குவரத்து சாலையான நான்கு ரதவீதிகளும் 20 மீ அகலத்திற்கு மேல் உள்ளதாலும், ஒருபுறம் மட்டும் தெருவிளக்கு வசதி இருப்பதாலும், பொதுமக்கள் போக்குவரத்திற்கு தேவையான ஒளிவசதி இல்லாமல் உள்ளன.எனவே, வழிபாடு, சுற்றுலாதளமான இந்நகரில் உள்ள பொதுமக்கள் மற்றும் வெளியூர்களிலிருந்து வரப்பெறும் பக்கதர்கள் சுற்றுலா பயணிகளில் இரவு நேர போக்குவரத்து வசதிக்கு நான்கு ரத வீதிகளிலும் புதிதாக 72 விளக்குகள் Ornamental pole அமைக்கும் பணிக்கும் இப்பணிக்கான மதிப்பீடு செலவினம் ரூ. 69,00,000/– இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி

வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குனருக்கு பிரேரணை சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு–**

1) பொதுமக்களின் நலன் கருதி இந்நகரின் முக்கிய நான்கு ரத வீதிகளில் ஆற்றல் சேமிப்புடன் கூடிய 72 எண்கள் புதிய LED தெருவிளக்குகள் அமைக்கும் பணிக்கு அரசின் நிர்வாக அனுமதி பெற பிரேரனை சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

2) இந்நகராட்சியின் நிதி நிலைமையை கருதி பணிக்கான மதிப்பீடு செலவினம் ரூ. 69.00 இலட்சத்திற்கு அரசின் சிறப்பு திட்ட நிதி மூலம் மானியமாக நிதி ஆதாரம் கோரலாம்.

**ந.க.எண். 2931/2021/இ2**

**2)** சிதம்பரம் நகராட்சி 15.06.1998–லிருந்து தேர்வு நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. 4.82 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட இந்நகராட்சியில் மொத்தம் 33 வார்டுகள் அமைந்துள்ளன. வழிபாட்டு தளம் என அழைக்கப்படும் இந்நகரம் இந்தியாவின் மிக முக்கியமான சுற்றுலா தளமுமாக விளங்குகிறது. தற்போதைய இந்நகராட்சியின் மொத்த மக்கள்தொகை 64500 இருந்தாலும் ஒரு சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் 13381 நபர்கள் வசித்து வருகிறார்கள்.இந்நகராட்சியில் 54.756 கிமீ நகராட்சி சாலையும், 8.870 கிமீ நெடுஞ்சாலைத்துறை சாலைகளும் ஆக மொத்தம் 62.386 கிமீ சாலைகள் உள்ளது.

இந்நகருக்கு தினசரி வந்து செல்லும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 25000–க்கு மேல் உள்ளது.மேலும், நடராஜர் கோயில் தேர்திருவிழா காலங்களில் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை தினசரி 50000 மேல் உள்ளது.

இந்நகராட்சி பகுதியில் கீழ்கண்டவாறு தெருவிளக்குகள் அமைந்துள்ளன.

| | | |
|---|---|---|
| 1 | 40 வாட்ஸ் குழல் விளக்குகள் | 1278 |
| 2 | 20 வாட்ஸ் CFL விளக்குகள் | 14 |
| 3 | 35 வாட்ஸ் CFL விளக்குகள் | 18 |
| 4 | 45 வாட்ஸ் CFL விளக்குகள் | 36 |
| 5 | 85 வாட்ஸ் CFL விளக்குகள் | 130 |
| 6 | 250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் | 405 |
| 7 | HML | 15 |
| | மொத்தம் | 1896 |

இந்நகர் வணி மையமாக மாறிவருவதால் சுற்றுபுற கிராம மக்கள் இந்நகருக்கு குடி பெயர்ந்து வருவதாலும் அண்ணாமலை பல்கலைகழகத்தில் பயில வரும் மாணவர்களின் தங்குமிட வசதிக்கு அடுக்குமாடி குடியிருப்புகள் பெருகுவதோடு நகரில் கட்டிடமில்லா காலியிடங்கள் அரசின் அனுமதிபெற்ற வரையறுக்கப்பட்ட மனை பிரிவுகளாக மாறி வருகின்றன.

இந்நகரின் பொதுமக்கள் இரவுநேர போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு நலனுக்காக அடிப்படை வசதியான தெருவிளக்கு வசதி 62.386 கிமீ சாலைக்கு 1896 தெருவிளக்குகள் மட்டுமே அமைக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றன. அரசின் நெறிமுறைபடி 30 மீட்டர் இடைவெளிக்கு ஒரு தெருவிளக்கு அமைக்கப்படவேண்டும். இந்த கணக்கீட்டின்படி தற்போது 2079 தெருவிளக்குகள் அமைக்கப்படவேண்டும். ஏற்கனவே, உள்ள 1896 விளக்குகள் தவிர இடைவெளி பகுப்பாய்வு கணக்கீட்டின்படி 183 விளக்குகள் புதியதாக அமைக்க வழிவகை உள்ளன. இதன்படி ஆற்றல் சேமிப்புடன் கூடிய 159 எண்கள் விளக்குகளை மின்வாரிய மின்கம்பத்தில் நகரின் விரிவாக்க பகுதிகளில் அமைக்க வேண்டியுள்ளன. பொதுமக்கள் நலன்கருதி, புதிதாக 159 எண்கள் தெருவிளக்குகளை அமைக்கும் பணிக்கும் இப்பணிக்கான மதிப்பீடு செலவினம்

ரூ.39,00,000/—க்கும் நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குனருக்கு பிரேரணை சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு—**

1) பொதுமக்களின் நலன் கருதி இந்நகரின் விரிவாக்க பகுதிகளில் ஆற்றல் சேமிப்புடன் கூடிய 159 எண்கள் புதிய LED தெருவிளக்குகள் அமைக்கும் பணிக்கு அரசின் நிர்வாக அனுமதி பெற பிரேரனை சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.
2) இந்நகராட்சியின் நிதி நிலைமையை கருதி பணிக்கான மதிப்பீடு செலவினம் ரூ. 39.00 இலட்சத்திற்கு அரசின் சிறப்பு திட்ட நிதி மூலம் மானியமாக நிதி ஆதாரம் கோரலாம்.

**ந.க.எண். 2931/2021/இ2**

**3)** இந்நகராட்சி நடராஜா கார்டன் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி போர்வெல் மண் அழுத்தம் காரணமாக போர்வெல் உறை குழாய் உடைந்து மண் சரிவு ஏற்பட்டு மோட்டார் இயக்க முடியவில்லை. ஆழ்துளை கிணற்றில் உள்ள மின் மோட்டார் வெளியே எடுக்க முயற்சி செய்தபோது மின்மோட்டார் பிடிப்பு ஏற்பட்டதால் வெளியே எடுக்க முடியவில்லை. பிறகு ஜாக்கி வைத்து முயற்சி செய்தபோது உறை குழாய் வெளியே சுமார் 6 மீட்டர் வந்தது.இதனால் போர்வெல் முற்றிலும் சரிவு ஏற்பட்டு மூடிவிட்டது.எனவே இதனை மீண்டும் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. எனவே மூன்று வார்டுகளுக்கு குடிநீர் விநியோகம் செய்ய முடியாமல் உள்ளது. எனவே பொதுமக்களின் நலன் கருதி புதியதாக ஆழ்துளை கிணறு அமைக்க தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.16,50,000/—க்கும் செலவை குடிநீர் விநியோக நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 1783/2021/இ1**

**4)** இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்காணும் பணியினை செய்ய **09.09.2021** அன்று **குடிநீர் நிதி 2021—22—ன்கீழ்** ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு கீழ்கண்ட விபரப்படி ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர்கள் பெயர் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்த சதவீதம் குறைவு | ஒப்பந்த சதவீதம் அதிகம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | குடிநீர் நிதி 2021—22 | | | | |
| 1 | சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4ல் உள்ள நடராஜா கார்டன் நீர்த்தேக்க தொட்டியில் புதியதாக | **மெஸ்ஸர்ஸ்.பாலன் எலக்ட்ரிகல் ஒர்க்ஸ்,** 10/2, வெல்லபிறந்தான் தெரு, சிதம்பரம் | 16,50,000/— | மதிப்பீட்டினை விட 0.26% குறைவு | —— |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஆழ்துளை கிணறு அமைக்கும் பணி. | **மெஸ்ஸர்ஸ்.ஜெ.பி. எலக்ட்ரிகல்ஸ்,** மெயின்ரோடு, வடலூர். | | –– | மதிப்பீட்டினை விட 0.15% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண்.5–ல் கண்டுள்ளபடி **மெஸ்ஸர்ஸ்.பாலன் எலக்ட்ரிகல் ஒர்க்ஸ்,** 10/2, வெல்லபிறந்தான் தெரு,சிதம்பரம்என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.26% குறைவாக உள்ளதால் மன்றம் ஏற்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :** **1)** மன்றம் அனுமதிக்கலாம்
2) பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 1783/2021/இ1**

**5)** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.29280/2020/IT நாள்.29.09.2021யில் சிதம்பரம் நகராட்சி செலுத்த வேண்டிய UTIS Connectivity Charges 01.01.2021 முதல் 31.03.2021 வரை ரூ.63,216/–, 01.04.2021 முதல் 31.06.2021 வரை ரூ.63,216/– ஆக கூடுதல் ரூ.1,26,432/–ஐ BSNL நிறுவனத்திற்கு செலுத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை செலுத்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1) மன்றம் அனுமதிக்கலாம்

2) அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர் நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி தொகையினை செலுத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டதை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண். 1926/2016/பி4**

**6)** இந்நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் டெங்கு கொசு ஒழிப்பு பணிக்கு 50 டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர்களின் பணிக்காலம் 30.09.2021 உடன் முடிவடைய உள்ளது. தற்போது மழைக்காலமாக உள்ளதாலும், டெங்கு கொசு ஒழிப்பு பணி இன்றியமையாத பணியாக உள்ளதாலும் 50 டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர்களின் பணி மிகவும் அத்தியாவசியமாக உள்ளது எனவும், மேலும் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் தடுப்பூசி முகாம் நடத்திடவும், டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர்களின் பணி இன்றியமையாதது எனவும், சுகாதார ஆய்வர் தெரிவித்துள்ளார். மேற்படி பணியாளர்களின் பணியினை நீட்டிப்பு செய்யக் கோரியதன் அடிப்படையில் தற்போது பணிபுரியும் மகளிர் சுய உதவிக்குழுவின் விருப்பம் கோரியதற்கு கடந்த 27.09.2021 நாளிட்ட கடிதம் வாயிலாக M/s. கங்கை மகளிர் சுயஉதவிக்குழு விருப்பம் தெரிவித்துள்ளார். எனவே, இப்பணியின் அவசியம் கருதி டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர்களின் பணியினை 01.10.2021 முதல் 31.12.2021 வரை நீட்டிப்பு செய்தும் அதற்கான செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, நகராட்சி தனி அலுவலர் அவர்களின் முனு அனுமதி பெற்று பணி நீட்டிப்பு உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 948/2020/எச்1**

**7)** இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்காணும் பணியினை செய்ய 01.09.2021 அன்று **குடிநீர் நிதி 2021–22–ன்கீழ்** ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு கீழ்கண்ட விபரப்படி ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர்கள் பெயர் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்த சதவீதம் குறைவு | ஒப்பந்த சதவீதம் அதிகம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | **குடிநீர் நிதி 2021–22** | | | | |
| 1 | சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 32, சிவசிவ நகர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்திற்கு கம்பி வேலி அமைத்தல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளுதல். | **திருமதி.ஆர்.கோமதி,** ஒப்பந்ததாரர், சம்பந்தகார தெரு சிதம்பரம். | 2,50,000/– | மதிப்பீட்டினை விட 0.10 % குறைவு | –– |
| | | **திருமதி.கே.முத்துலட்சுமி,** ஒப்பந்ததாரர், பணங்காடு. | | –– | மதிப்பீட்டினை விட 0.51 % அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண்.5–ல் கண்டுள்ளபடி **திருமதி.ஆர்.கோமதி,** என்ற ஒப்பந்ததாரரின் மதிப்பீட்டைவிட 0.10% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :** **1)** மன்றம் அனுமதிக்கலாம்
**2)** பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 1873/2021/இ1**

**8)** இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்காணும் பணியினை செய்ய 02.09.2021 அன்று **வருவாய் நிதி 2021–22–ன்கீழ்** ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு கீழ்கண்ட விபரப்படி ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர்கள் பெயர் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்த சதவீதம் குறைவு | ஒப்பந்த சதவீதம் அதிகம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | **வருவாய் நிதி 2021–22** | | | | |
| 1 | சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 7, மன்மதசாமி நகர் பூங்காவில் அடிப்படை வசதி பணிகள் மேற்கொள்ளுதல் | **திருமதி.கே.முத்துலட்சுமி,** ஒப்பந்ததாரர், பணங்காடு. | 1,25,000/– | மதிப்பீட்டினை விட 0.19 % குறைவு | –– |
| | | **திரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி,** ஒப்பந்ததாரர், நாஞ்சலூர். | | –– | மதிப்பீட்டினை விட 1.02 % அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண்.5–ல் கண்டுள்ளபடி **திருமதி.கே.முத்துலட்சுமி,** என்ற ஒப்பந்ததாரரின் மதிப்பீட்டைவிட 0.19% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :** **1)** மன்றம் அனுமதிக்கலாம்
2) பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 1873/2021/இ1**

**9)** இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்காணும் பணியினை செய்ய 02.09.2021 அன்று **குடிநீர் நிதி 2021–22–ன்கீழ்** ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு கீழ்கண்ட விபரப்படி ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது.

| **வ. எண்.** | **பணியின் விபரம்** | **ஒப்பந்ததாரர்கள் பெயர் விபரம்** | **மதிப்பீட்டு தொகை ரூ.** | **ஒப்பந்த சதவீதம் குறைவு** | **ஒப்பந்த சதவீதம் அதிகம்** |
|---|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** | **6** |
| | **குடிநீர் நிதி 2021–22** | | | | |
| 1 | சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 7, மானா டேங்க் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தில்பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | **திருமதி.கே.முத்துலட்சுமி,** ஒப்பந்ததாரர், பணங்காடு. | 2,50,000/– | மதிப்பீட்டினை விட 0.32% குறைவு | –– |
| | | **திரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி,** ஒப்பந்ததாரர், நாஞ்சலூர். | | –– | மதிப்பீட்டினை விட 0.67% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண்.5–ல் கண்டுள்ளபடி **திருமதி.கே.முத்துலட்சுமி,** என்ற ஒப்பந்ததாரரின் மதிப்பீட்டைவிட 0.32% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :** **1)** மன்றம் அனுமதிக்கலாம்
2) பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.1873/2021/இ1**

**10)** இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்காணும் பணியினை செய்ய 01.09.2021 அன்று **குடிநீர் நிதி 2021–22–ன்கீழ்** ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு கீழ்கண்ட விபரப்படி ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது.

| **வ. எண்.** | **பணியின் விபரம்** | **ஒப்பந்ததாரர்கள் பெயர் விபரம்** | **மதிப்பீட்டு தொகை ரூ.** | **ஒப்பந்த சதவீதம் குறைவு** | **ஒப்பந்த சதவீதம் அதிகம்** |
|---|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** | **6** |
| | **குடிநீர் நிதி 2021–22** | | | | |
| 1 | சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 18, | **திருமதி.ஆர்.கோமதி,** ஒப்பந்ததாரர், சம்பந்தகார தெரு சிதம்பரம். | 30,000/– | மதிப்பீட்டினை விட 0.14% குறைவு | –– |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வெல்லபிறந்தான் தெருவில் உள்ள சிறுமின்விசை பம்பு (Mini Power Pump) பழுது நீக்கிபராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | **திருமதி.கே.முத்துலட்சுமி,** ஒப்பந்ததாரர், பணங்காடு. | | –– | மதிப்பீட்டினை விட 0.31% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண்.5–ல் கண்டுள்ளபடி **திருமதி.ஆர்.கோமதி,** என்ற ஒப்பந்ததாரரின் மதிப்பீட்டைவிட 0.14% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலகக் குறிப்பு : 1)** மன்றம் அனுமதிக்கலாம்
2) பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 1873/2021/இ1**

**11)** இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்காணும் பணியினை செய்ய 01.09.2021 அன்று **வருவாய் நிதி 2021–22–ன்கீழ்** ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு கீழ்கண்ட விபரப்படி ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர்கள் பெயர் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்த சதவீதம் குறைவு | ஒப்பந்த சதவீதம் அதிகம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | வருவாய் நிதி 2021–22 | | | | |
| 1 | சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட சபாநாயகர் தெரு, வைப்பு சாவடி, மேற்கு ரதவீதி மற்றும் வடக்கு மெயின்ரோடு ஆகிய பல்வேறு சாலைகளில் சிமெண்ட் கான்கிரீட் ஒட்டு பணி (Patch Work) மேற்கொள்ளுதல். | **திருமதி.ஆர்.கோமதி,** ஒப்பந்ததாரர், சம்பந்தகார தெரு சிதம்பரம். | 90,000/– | மதிப்பீட்டினை விட 0.05% குறைவு | –– |
| | | **திருமதி.கே.முத்துலட்சுமி,** ஒப்பந்ததாரர், பணங்காடு. | | –– | மதிப்பீட்டினை விட 0.09% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண்.5–ல் கண்டுள்ளபடி **திருமதி.ஆர்.கோமதி,** என்ற ஒப்பந்ததாரரின் மதிப்பீட்டைவிட 0.05% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலகக் குறிப்பு : 1)** மன்றம் அனுமதிக்கலாம்
2) பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 1873/2021/இ1**

**12)** இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்காணும் பணியினை செய்ய **02.09.2021** அன்று **குடிநீர் நிதி 2021–22–ன்கீழ்** ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு கீழ்கண்ட விபரப்படி ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர்கள் பெயர் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்த சதவீதம் குறைவு | ஒப்பந்த சதவீதம் அதிகம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | குடிநீர் நிதி 2021–22 | | | | |
| 1 | சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 4, நடராஜா கார்டன் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்திற்கு கம்பி வேலி அமைத்தல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளுதல். | **திருமதி.கே.முத்துலட்சுமி,** ஒப்பந்ததாரர், பணங்காடு. | 4,20,000/– | மதிப்பீட்டினை விட 0.12 % குறைவு | –– |
| | | **திரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி,** ஒப்பந்ததாரர், நாஞ்சலூர். | | –– | மதிப்பீட்டினை விட 0.66 % அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண்.5–ல் கண்டுள்ளபடி **திருமதி.கே.முத்துலட்சுமி,** என்ற ஒப்பந்ததாரரின் மதிப்பீட்டைவிட 0.12% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :** **1)** மன்றம் அனுமதிக்கலாம்
2) பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 1873/2021/இ1**

**13)** சிதம்பரம் நகராட்சி பொது நிதி **2017–18–ன்** கீழ் இந்நகராட்சி வடக்கு மெயின்ரோடு அம்பேத்கார் நகரில், துப்புரவு பணியாளர் குடியிருப்பில் கூடுதல் துப்புரவு பணியாளர்கள் குடியிருப்பதாக, முதல் தளம் அமைக்கும் பணி ரூ.**25.00** இலட்சத்திற்கு **20.10.2017** ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு **30.10.2017–ல்** பணி உத்தரவு வழங்கப்பட்டது. ஆனால் இதுநாள்வரை பணியானது முழுவதும் முடிக்காமல் உள்ளது.காலதாமதம் குறித்து ஒப்பந்ததாரருக்கு **07.06.2018, 13.06.2018, 02.07.2018, 21.02.2019, 23.03.2021** மற்றும் **16.06.2021** அறிவிப்பு கடிதம் மற்றும் இறுதி அறிவிப்புகள் வழங்கப்பட்டது. மேலும் **16.08.2021** ல் (Show Case notice) வழங்கப்பட்ட போதிலும் இதுநாள்வரை ஒப்பந்ததாரர் எழுத்து பூர்வ விளக்கம் ஏதும் அளிக்காமலும், பணியினை முடிக்காமலும் காலம் தாழ்த்தி வருகிறார். மேலும் ஒப்பந்ததாரரின் இச்செயலால் திட்டத்தை முழுவதும் முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவர இயலாத நிலையில் உள்ளது. இதனால் நகராட்சிக்கு அவப்பெயர் ஏற்படுவதோடு, வருவாய் இழப்பும் ஏற்படுகிறது. இந்த நிதி இழப்பை தவிர்க்கும்பொருட்டு மேற்படி ஒப்பந்தத்தை இரத்து செய்து மீதம் உள்ள பணிகளை ஒப்பந்தப்புள்ளி கோரி முடிக்கவும் இதனால் நகராட்சிக்கு ஏற்படும் கூடுதல் செலவினத்தை ஒப்பந்ததாரின் வைப்புத்தொகையில் ஈடு செய்து கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.2893/2017/இ1**

**14)** சிதம்பரம் நகராட்சி பொது நிதி 2017–18–ன் கீழ் இந்நகராட்சி துப்புரவு பணியாளர் குடியிருப்புக்கு குடிநீர், கழிவுநீர் குழாய்கள் அமைக்கவும் மற்றும் மின் பணிகள் செயது தரும் பணி ரூ. 15.00 இலட்சத்திற்கு 20.10.2017 ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 30.10.2017–ல் பணி உத்தரவு வழங்கப்பட்டது. ஆனால் இதுநாள்வரை பணியானது முழுவதும் முடிக்காமல் உள்ளது.காலதாமதம் குறித்து ஒப்பந்ததாரருக்கு 07.06.2018, 13.06.2018, 02.07.2018, 16.07.2018, 21.02.2019, 23.03.2021 மற்றும் 16.06.2021 அறிவிப்பு கடிதங்கள் மற்றும் இறுதி அறிவிப்புகள் வழங்கப்பட்டது. மேலும் 16.06.2021ல் (Show Case notice) வழங்கப்பட்ட போதிலும் இதுநாள்வரை ஒப்பந்ததாரர் எழுத்து பூர்வ விளக்கம் ஏதும் அளிக்காமலும் பணியினை முடிக்காமலும் காலம் தாழ்த்தி வருகிறார். மேலும் ஒப்பந்ததாரரின் இச்செயலால் திட்டத்தை முழுவதும் முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவர இயலாத நிலையில் உள்ளது. இதனால் நகராட்சிக்கு அவப்பெயர் ஏற்படுவதோடு, வருவாய் இழப்பு ஏற்படுகிறது. இந்த நிதி இழப்பை தவிர்க்கும்பொருட்டு மேற்படி ஒப்பந்தத்தை இரத்து செய்து மீதம் உள்ள பணிகளை ஒப்பந்தப்புள்ளி கோரி பணியை முடிக்கவும் இதனால் நகராட்சிக்கு ஏற்படும் கூடுதல் செலவினத்தை ஒப்பந்ததாரின் வைப்புத்தொகையில் ஈடு செய்து கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 2894/2017/இ1**

**15)** சிதம்பரம் நகராட்சி நகராட்சி வருவாய் நிதி 2019–20–ன் கீழ் இந்நகராட்சியில் வடக்கு மெயின்ரோட்டில் கட்டப்பட்டுள்ள துப்புரவு பணியாளர் குடியிருப்புக்கு சுற்றுச்சுவர் மற்றும் பேவர் பிளாக் அமைக்கும் பணி ரூ. 18.20 இலட்சத்திற்கு 28.02.2020 ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 28.02.2020–ல் பணி உத்தரவு வழங்கப்பட்டது. ஆனால் இதுநாள்வரை பணியானது முழுவதும் முடிக்காமல் உள்ளது.காலதாமதம் குறித்து ஒப்பந்ததாரருக்கு 23.03.2021 மற்றும்16.06.2021 அறிவிப்பு கடிதம் மற்றும் இறுதி அறிவிப்புகள் வழங்கப்பட்டது. மேலும் 16.06.2021 ல் (Show Case notice) வழங்கப்பட்ட போதிலும் இதுநாள்வரை எழுத்து பூர்வ விளக்கம் ஏதும் தராமலும் ஒப்பந்ததாரர் பணியினை முடிக்காமலும் காலம் தாழ்த்தி வருகிறார். மேலும் ஒப்பந்ததாரரின் இச்செயலால் திட்டத்தை முழுவதும் முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவர இயலாத நிலையில் உள்ளது. இதனால் நகராட்சிக்கு அவப்பெயர் ஏற்படுவதோடு, வருவாய் இழப்பு ஏற்படுகிறது. இந்த நிதி இழப்பை தவிர்க்கும்பொருட்டு மேற்படி ஒப்பந்தத்தை இரத்து செய்து மீதம் உள்ள பணிகளை ஒப்பந்தப்புள்ளி கோரி முடிக்கவும் இதனால் நகராட்சிக்கு ஏற்படும் கூடுதல் செலவினத்தை ஒப்பந்ததாரின் வைப்புத்தொகையில் ஈடு செய்து கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.4785/2019/இ1**

**16)** தமிழ்நாடு அரசு சட்டமன்ற கூட்ட தொடர் 2021–22–ம் ஆண்டின் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைமானிய கோரிக்கை அறிவிப்பு மற்றும் கலைஞர் நகர்புற மேம்பாட்டுதிட்டத்தின் கீழ் நகராட்சிகளில் பொதுமக்களின் நலனுக்காகவும், போக்குவரத்திற்காகவும் விரிவாக்கப குதிகளில் மற்றும் இதர பகுதிகளில் உள்ள மண் சாலைகளைபேவர் பிளாக் சாலைகளாக மாற்றப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் சிதம்பரம் நகராட்சிபகுதியில் உள்ள மண் சாலைகளை பேவர் பிளாக் சாலைகளாக மாற்ற கீழ்காணும் விபரப்படிமதிப்பீடுதயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | நீளம் (மீ) | அகலம் (மீ) | மொத்தம் | மதிப்பீடுதொகை (லட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1 | **வார்டு எண். 1–ல் மண் சாலையினைபேவர் பிளாக் சாலையாகஅமைக்கும் பணி.** | | | | |
| | 1) டோபிகானாதெரு | 200.00 | 4.50 | 371.00 | 37.00 |
| | 2) தில்லைநாதன் நகர் | 171.00 | 4.50 | | |
| 2 | **வார்டு எண். 4–ல் மண் சாலையினைபேவர் பிளாக் சாலையாகஅமைக்கும் பணி.** | | | | |
| | 1) ஆசீர்வாதநகர் 2–வது குறுக்கு தெரு, | 126.00 | 4.50 | 729.00 | 75.00 |
| | 2) அம்மாநகர் | 155.00 | 4.50 | | |
| | 3)நடராஜாகார்டன் உட்புறசாலைகள் | 448.00 | 4.50 | | |
| 3 | வார்டுஎண்.22, முத்துகிருஷ்ணன் நகரில்உள்ள மண் சாலையினைபேவர் சாலையாகபிளாக் அமைக்கும் பணி. | 200.00 | 4.50 | 200.00 | 20.00 |
| | **கூடுதல்** | **1300.00** | | | **132.00** |

நகராட்சியில் உள்ள சாலை பராமரிப்பில் மொத்தம் 4.154 கிலோமீட்டர் மண் சாலைகள் உள்ளது. இதில் குடியிருப்புகள்அமைந்துள்ள 1.300 கிலோமீட்டர் நீளம் மண் சாலைகளை மட்டும் பேவர் பிளாக் சாலையாகதரம் உயர்த்த மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு ரூ.132.00 இலட்சத்திற்கு விரிவான திட்டகருத்துரு தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்களிடம் தமிழ்நாடு அரசின் முழு மான்யத்துடன் நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி வேண்டி பிரேரணை அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அரசிடம் உரியஅனுமதிகள்பெற்றுநிதியுதவிபெறுவதற்கு நகராட்சிநிர்வாகஇயக்குனர்,சென்னைஅவர்களுக்கு முன் மொழிவுகளைசமர்ப்பிக்கலாம்.

**ந.க.எண்:2634/2021/இ1**

**17)** இந்நகராட்சியின் 33 வார்டுகளுக்கும் கேட்பு பட்டியல் (Demand Hand Book) ஆய்வு செய்ததில் 2004–2005 முதல் மாதாந்திர பட்டியல்களில் புதிதாக சொத்துவரி வரிவிதிப்பு செய்யப்பட்டு பழைய வரிவிதிப்பு எண்களை நீக்கம் செய்ய ஆணையரால் பரிந்துரைக்கப்பட்டு கேட்பு எண்கள் நீக்கம் செய்யாமல் இருப்பது தெரியவந்துள்ளது, மேலும் பொது மக்களும் நீக்கம் செய்ய வேண்டிய பழைய வரி விதிப்புகளுக்கு தொடர்ந்து கேட்பு அறிவிப்பு வருகிறது என புகார் தெரிவித்து வருகிறார்கள். எனவே, இது குறித்து வருவாய் உதவியாளர்கள் மற்றும் வருவாய் ஆய்வர்களிடம் நீக்கம் செய்யும் கேட்புகளின் அறிக்கை கோரப்பட்டது. அதன்பேரில் வருவாய் உதவியாளர்கள் மற்றும் வருவாய் ஆய்வர்கள் அளித்த அறிக்கையினை ஆய்வு செய்திட இந்நகராட்சியில் பணிபுரியும் கீழ் காணும் அலுவலர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டது.

| வ.எண் | பெயர் | பதவி |
|---|---|---|
| 1 | திருமதி அ. விஜயலட்சுமி | மேலாளர் |
| 2 | திரு. கோ. ஆனந்தராஜிலு | கணக்கர் |
| 3 | திரு. வி.ஆர்.ரமேஷ் | உதவியாளர் |
| 4 | திரு.ப. அன்பரசன் | வருவாய் ஆய்வர் |
| 5 | திரு.எஸ். ஆரோக்கிய பிரின்ஸ் | வருவாய் ஆய்வர் |
| 6 | திருமதி தி.பொன்னி | இளநிலை உதவியாளர் |
| 7 | திரு. சின்னப்பராஜ் | வருவாய் உதவியாளர் |
| 8 | திரு. தங்கராஜ் | வருவாய் உதவியாளர் |
| 9 | திரு. ப. பாலமுருகன் | வருவாய் உதவியாளர் |

மேற்காணும் குழுவினர் கணினியில் நீக்கம் செய்ய வேண்டிய சொத்துவரி விதிப்புக் குறித்து அறிக்கை அளித்துள்ளார்கள். அக்குழுவின் பரிந்துரையின்படி 225 சொத்துவரி வரிவிதிப்புகள் மற்றும் அதன் கேட்பு தொகை ரூ.1614602/– ஐ கணினி சொத்துவரி கேட்பில் இருந்து நீக்க. செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

இந்நகராட்சியின் சொத்துவரி கேட்பு பதிவேட்டில், நீக்கம் செய்யப்பட வேண்டிய சொத்துவரி விதிப்புகள் குறித்த விவரங்கள் மாதாந்திர பட்டியலில் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, நீக்கம் செய்யப்படவேண்டிய வரிவிதிப்புகள் கேட்புடன் நீக்கம் செய்திட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 118 சரத்துகளின்படி வஜா செய்திட மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**ந.க.எண். 3975/2020/அ2**

**18)** இந்நகராட்சியின் எல்லைக்குட்பட்ட வார்டு எண்.6, காமராஜ் மெட்ரிகுலேசன் பள்ளியின் வரிவிதிப்பிற்கு தெருவின் பெயர் மற்றும் கதவு எண் மாற்றுவதற்காக கதவு எண்– 1, வாகிச நகர் தவறுதலாக வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது, என்றும் அதனை திருத்தம் செய்து 70, வேங்கான்தெரு என்று தெருவின் பெயர் வரவேண்டும், என்று மனு அளித்து உள்ளனர். ஆனால் வாகீசா நகருக்கு மற்றும் வேங்கான் தெருவிற்கும் Zone தொகை வித்தியாசபடுவதால் தற்போது பெயர் மாற்றம் செய்ய இயலாது. அதனால் ஆணையர் அவர்களால் ஒரு குழு அமைத்து கட்டிடத்தை அளவீடு செய்து அதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள அறிவிப்பு வழங்கப்பட்டிருந்தது. அதன்

அடிப்படையில் நகரமைப்பு ஆய்வர், வருவாய் ஆய்வாளர் மற்றும் வருவாய் உதவியாளர் கொண்ட குழுவால் காமராஜ் பள்ளியினை மீண்டும் ஒரு முறை அளவீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பள்ளி வேங்கான் தெருப்பகுதியில் வருவதாகவும், அதன் அளவுகள் **38858** சதுரடி எனவும், குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், இதனைத்தவிர, ஏற்கனவே உள்ள காலியிடங்களில் புதிய கட்டிடங்கள் உள்ளன. எனவும், அவை தனியே வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும் எனவும் குழுவால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் காமராஜ் மெட்ரிக் பள்ளியின் பழைய வரிவிதிப்பை நீக்கம் செய்துவிட்டு, குழுவின் அறிக்கையின்படி மறு அளவீடுகளுக்கு புதியதாக வரிவிதிப்பு செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (பள்ளி அலுவலகம் சொத்துவரி எண்.092/006/00232 மற்றும் பள்ளி சொத்துவரி எண்.092/006/00302).

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.0509/2021/அ2**

**19)** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 2274 தெருவிளக்குகள் உள்ளன.

| | | | |
|---|---|---|---|
| • 4x40 W Tube light | : | 1495 | Nos. |
| • 250 W Sodium Vapour Lamp | : | 566 | “ |
| • 150 W LED High mast Light | : | 3 | “ |
| • 250 W SV High mast Light | : | 11 | “ |
| • 400 W MH High mast Light | : | 1 | “ |
| • 20 W CFL lights | : | 14 | “ |
| • 35 W CFL lights | : | 18 | “ |
| • 45 W CFL lights | : | 36 | “ |
| • 85 W CFL lights | : | 130 | “ |
| | **Total** | **2274** | **Nos.** |

இந்த விளக்குகளை பராமரிக்க தேவையான மின்உதிரி பாகங்கள் இருப்பு குறைவாக உள்ளது. மேலும் இந்நகரில் வடகிழக்கு பருவமழை காலம் துவங்க உள்ள நிலையில், மேற்காணும் தெருவிளக்குகளின் (உயர்கோபுர விளக்குகள் நீங்கலாக) பராமரிப்பு பணி தொய்வின்றி நடைபெற தேவையான மின் உதிரி பாகங்களை 2021—22—ம் நிதியாண்டின் பராமரிப்பு பணிக்கான முதற்கட்ட தேவைப்பட்டியலுக்கு வாங்கும் பணிக்கும், இப்பணிக்கான மதிப்பீடு செலவினம் ரூ.5,00,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இப்பணிக்கான செலவினத்தினை 2021—22—ம் நிதியாண்டு பொது நிதி வரவு செலவு பட்டியலில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3) பணியின் அவசிய அவசரம் கருதி நகராட்சி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 1725 /2021/இ2**

**20)** சிதம்பரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு நகராட்சி பகுதியில் வெளி முகமை தூய்மை பணியாளர்கள் பணிக்கு 153 பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ள விலைப்புள்ளி கோரப்பட்டது இதில் கீழ்கண்ட விலைப்புள்ளி பெறப்பட்டது.

1. கங்கை மகளிர் சுய உதவிக்குழு நாள் ஒன்றுக்கு ரூ.390/–
2. ஜான்சிராணி மகளிர் சுய உதவிக்குழு நாள் ஒன்றுக்கு ரூ.395/–
3. சிகரம் மகளிர் சுய உதவிக்குழு நாள் ஒன்றுக்கு ரூ.400/–

மேற்கண்ட விலைப்புள்ளியில் குறைவாக கொடுக்கப்பட்ட கங்கை மகளிர் சுய உதவிக்குழு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பணியின் அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரியதையும், பணி உத்தரவு வழங்கப்பட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். மேலும் அதற்காகும் செலவீனத்தையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 882/2017/ எச்1**

**21)** தமிழ்நாடு மாநில தகவல் ஆணையத்தில் திரு.செந்தில்குமார் என்பவர் தொடர்ந்த வழக்கில் NC1323/D/2020 & MC1124/D/2019 ஆணை நாள்.13.09.2021 நகராட்சிக்கு பாதகமாக தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இதனை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திடவும் அதற்கான வழக்காடு கட்டணம் ரூ.25,000/–யை சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.P.ஸ்ரீநிவாஸ் அவர்களுக்கு வழங்கிடவும் மன்ற அனுமதிக்கு.

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதியுடன் செலவினம் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 193/2019/சி1)**

**22)** இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்காணும் பணியினை செய்ய 07.10.2021 அன்று **வருவாய் நிதி 2021–22–ன்கீழ்** ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு கீழ்கண்ட விபரப்படி ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர்கள் பெயர் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்த சதவீதம் குறைவு | ஒப்பந்த சதவீதம் அதிகம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | வருவாய் நிதி 2021–22 | | | | |
| 1 | நகராட்சி தெருவிளக்குகள் பராமரிப்பு பணிகளுக்கு தேவைப்படும் உதிரிபாகங்கள் விநியோகம் செய்யும் பணி | **மெஸ்ஸர்ஸ்.பாலன் எலக்ட்ரிகல் ஒர்க்ஸ்,** 10/2, வெல்லபிறந்தான் தெரு, சிதம்பரம். | 5,00,000/– | மதிப்பீட்டினை விட 0.25 % குறைவு | –– |
| | | **மெஸ்ஸர்ஸ்.தனம் கம்பெனி,** | | –– | மதிப்பீட்டினை விட 0.95 % |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | தெற்கு வீதி, சிதம்பரம். | | | அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண்.5–ல் கண்டுள்ளபடி **மெஸ்ஸர்ஸ்.பாலன் எலக்ட்ரிகல் ஒர்க்ஸ், 10/2**, வெல்லபிறந்தான் தெரு,சிதம்பரம்என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.25% குறைவாக உள்ளதால் மன்றம் ஏற்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :** **1)**மன்றம் அனுமதிக்கலாம்
2) பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 1725/2021/இ1**

**23)** சிதம்பரம் நகராட்சி 25.03.1973 –ல் இருந்து தேர்வு நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. 4.82 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட இந்நகராட்சியில் மொத்தம் 33 வார்டுகள் அமைந்துள்ளன. வழிபாட்டு தளம் என அழைக்கப்படும் இந்நகரம் இந்தியாவின் மிக முக்கியமான சுற்றுலா தளமுமாக விளங்குகிறது. 2011 ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியின் மக்கள் தொகை 62153 ஆகும். இந்நகராட்சியில் 54.756 கி.மீட்டர் நகராட்சி சாலையும், 8.870 கி.மீட்டர் நெடுஞ்சாலைத் துறை சாலைகளும் ஆக மொத்தம் 63.626 கி.மீட்டர் சாலைகள் உள்ளது.

இந்நகருக்கு தினசரி வந்து செல்லும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 25000 க்கு மேல் உள்ளது.மேலும், நடராஜர் கோயில் தேர்திருவிழா காலங்களில் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை தினசரி 50000 மேல் உள்ளது.

இந்நகராட்சி பகுதியில் கீழ்க்கண்டவாறு தெருவிளக்குகள் அமைந்துள்ளன.

| | | |
|---|---|---|
| 1 | 40வாட்ஸ் குழல் விளக்குகள் | 1278 |
| 2 | 20 வாட்ஸ் CFL விளக்குகள் | 14 |
| 3 | 35 வாட்ஸ் CFL விளக்குகள் | 18 |
| 4 | 45 வாட்ஸ் CFL விளக்குகள் | 36 |
| 5 | 85 வாட்ஸ் CFL விளக்குகள் | 130 |
| 6 | 250 வாட்ஸ்சோடியம் ஆவி விளக்குகள் | 405 |
| 7 | HML | 15 |
| | மொத்தம் | 1896 |

பார்வையில் காணும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்படி, நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவுகோலின்படி, கீழ்க்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

| **வ.எண்.** | **பணியாளர் விபரம்** | **ஒளிர் உமிழ் விளக்குகள் அல்லாத பிறவகையான விளக்குகளை இயக்கி எரியூட்டி பரமரித்தல் பணிக்கு தேவைப்படும் பணியிடம்** | **தற்போது உள்ள பணியாளர்கள்** | **தேவைப்படும் பணியாளர்கள் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| 1 | மின் கம்பியாளர் | 3 | 1 | 2 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | மின் கம்பி உதவியாளர் | 3 | 0 | 3 |

எனவே சிதம்பரம் நகராட்சியின் ஒளிர் உமிழ் விளக்குகள் அல்லாத பிறவகையான விளக்குகள் இயக்கி எரியூட்டி பராமரிப்பு பணிகள் இணைப்பு படிவத்தில் குறிப்பிட்டுள்ள அளவுகோலின் படி மேற்கொள்வதற்கு தற்போதுள்ள நிரந்தர மின் கம்பியாளர் 1 நபர் தவிர மற்ற பணியாளர்கள் இல்லாதநிலையால் இந்நகராட்சியின் தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை வெளிகொணர்வு முகமை மின் கம்பியாளர் 3நபர்கள் மூலமும் பராமரிக்க இயலும். இப்பணியாளர்களின் ஊதிய செலவினம் ஒரு வருடத்திற்கு ரூபாய் 15.30 லட்சம் ஆகும்.

மேலும், சிதம்பரம் நகரம் வழிப்பாட்டு தளம் மற்றும் சுற்றுலா நகரம் என்பதினால் பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பினையும் சிறப்பினமாக கருதி இந்நகராட்சியின் தெருவிளக்கு பராமரிப்பு பணியின் வெளிகொணர்வு முகமை பணியாளர்கள் மூன்று ஆண்டுகளுக்கு மேற்கொள்ளவும், இப்பணிக்கான ஊதிய செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் ஒவ்வொரு ஆண்டின் முடிவிலும் பணிதிறன் மதிப்பீடு செய்து ஒப்பந்ததொகையில் 5 சதவீதம் உயர்வு செய்து மன்ற ஒப்புதல் பெற்று ஒப்பந்தம் புதுப்பிக்கவும் , தனியார் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரி பணியாளர்களை பணியமர்த்தி கொள்ளவும் நிர்வாக அனுமதி பெறுவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு பிரேரணை அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அரசிடம் உரிய அனுமதிகள் பெற்று நிதியுதவி பெறுவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்களுக்கு முன்மொழிவுகள் சமர்ப்பிக்கலாம்.

**ந.க.எண்:106/2021/இ2**

**24)** இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பணிபுரிந்து வரும் வெளிமுகமை பணியாளர் டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர்கள், அம்மா உணவகம் பணியாளர்களின் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி செலுத்துவது தொடர்பாக தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மண்டல அலுவலர் திருச்சி உதவி ஆணையர் அவர்களின் உத்தரவு எண்.ENFD/TNRO-TRY-C1/81715/8F 2019–2020, நாள்.18.09.2019ன் படி வெளிமுகமை பணியாளர் டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர்கள், அம்மா உணவகம் பணியாளருக்கு வருங்கால வைப்பு நிதி செலுத்துவது தொடர்பாக இந்நகராட்சி கல்வி நிதி கணக்கிலிருந்து ரூ.1727791/– சிட்டி யூனியன் வங்கியிலிருந்து தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி ஆணையர் எடுக்கப்பட்டதை மீள பெற சென்னை உயர்நீதி மன்றத்தில் Writ Petition போடுவதற்கும் திரு.P.ஸ்ரீநிவாஸ் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் மூலம் நடவடிக்கை எடுப்பதற்கு வழக்கு கட்டணமாக ரூ.25000/–ம் கோரப்பட்டுள்ளது மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** தனி அலுவலர் முன் அனுமதி பெற்று நடவடிக்கை எடுக்கப்பட்டதற்கு மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்.4431 / 2016 / எச்1**

**25)** சிதம்பரம் நகராட்சி பகுதி **4.82** சதுர கிமீ பரப்பளவு கொண்ட தேர்வு நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி பகுதி **33** வார்டுகளாக பிரிக்கப்பட்டு **2011** மக்கள்தொகை கணக்கெடுப்பு படி **62153** நபர்கள் வசிக்கும் பகுதியில் **14058** வரிவிதிப்புகள் உள்ள நகராட்சியாகும்.

சிதம்பரம் நகரில் உலக பிரசித்தபெற்ற புராதனமான அருள்மிகு ஸ்ரீசிவகாமசுந்தரி சமேத ஸ்ரீமத் ஆனந்த நடராஜமூர்த்தி திருகோயில் அமைந்துள்ளது.உலகதரம் வாய்ந்த அண்ணாமலை பல்கலைகழகம் , அண்ணாமலை மருத்துவகல்லூரி மருத்துவமனை அமைந்ததுள்ள பகுதியாகும். பலவிதமான அடுக்குமாடி குடியிருப்புகளும், வணிகவளாகங்கள் அமைந்த பகுதியாகவும் அமைந்துள்ளது. சிதம்பரம் நகர் கோயில் ஸ்தலம் என்பதாலும், பல்கலை கழகம் அமைந்துள்ள பகுதியாக உள்ளதாலும், தினசரி பல்வேறு நகரங்களிலிருந்து ஏராளமான சுற்றுலா பயணிகள் மற்றும் பொதுமக்கள் நாள் ஒன்றுக்கு **25000** க்கும் மேற்பட்ட மக்கள் வந்து செல்கின்றனர்.

இந்நகரின் தற்போதைய மக்கள்தொகை **64500** க்கு ஏற்ப தினசரி **8.70**MLDகுடிநீர் வழங்கவேண்டும். கொள்ளிடம் ஆற்றில் நீரின் உவர்தன்மை காரணமாக வடக்கு ராஜன் வாய்க்காலில் வரப்பெறும் நீரை வக்காரமாரி குடிநீர் தலைமை நீரேற்றும் நிலையத்தில் இரட்டை குளங்களில் தேக்கம் செய்து சுத்திகரிப்பு செய்து சிதம்பரம் நகருக்கு நீரேற்றம் நடைபெற்று வரப்பெற்றன. சுத்தகரிப்பு நிலையம் செயல்பாடு இன்மை காரணமாக வழங்கப்பட்ட குடிநீர் விநியோகம் தடைபெற்றதால் தற்சமயம் **8** ஆழ்துளை கிணறு நீர் ஆதாரத்தினை கொண்டு சிதம்பரம் நகர் முழுவதும் தினசரி **3.90** MLD குடிநீர் விநியோகம் நடைபெறுகிறது.

இப்பணிக்காக வக்காரமாரி தலைமை நீரேற்று நிலையத்தில் **3** ஆழ்துளை கிணறுகளும் , சம்பந்தகாரதெரு, நடராஜ கார்டன், மானா சந்து, வீரபத்திரசாமி கோயில் தெரு, சிவசிவ நகர் மற்றும் கனகசபை நகர் OHT ல் உள்ள **5** எண்கள் ஆழ்துளை கிணறுகளின் நீர் ஆதாரத்தினை கொண்டு இந்நகர் முழுவதும் உள்ள பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் **33** வார்டு பகுதிகளின் **58.98** கிமீ குடிநீர் விநியோக குழாய் மூலம் வழங்கப்படுகிறது.

மேற்கூறிய அனைத்து பணிகளும் நடைபெற தற்போது இந்நகராட்சியில் **6** நிரந்தர பணியாளர்கள் மட்டுமே உள்ளார்கள். தற்போது அரசின் நெறிமுறைகளின்படி நிரந்தர பணியாளர்களை நியமித்தால் கூடுதல் செலவினம் ஏற்படும் என கருதி பணிகளின் தன்மைகேற்ப வெளிமுகமை பணியாளர்களை கணக்கீடு நிர்ணயம் செய்து ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் பணிகள் நடைபெறுவும் இதற்கான தினசரி ஊதியத்தினை பொதுபணித்துறை விலைப்பட்டியல் விகித்தில் நிர்ணயித்து உரிய நிர்வாக அனுமதி பெற நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நகராட்சியில் குடிநீர் வழங்கல் மற்றும் விநியோக பணிக்காக மேற்கூறப்பட்ட நெறிமுறைகள்படி குடிநீர் தலைமை பணியிடம் , **6** எண்ணிக்கையிலான மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் மற்றும் குடிநீர் விநியோக பணிகளின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை

வெளிமுகமை பணியாளர்களை கொண்டு மேற்கொள்ள பின்வரும் விபரங்கள் சமர்ப்பிக்கப்படுகிறது.

| பணியின் விபரம் | தேவையான பணியாட்களின் அளவுகோல்கள் | தற்போது உள்ள பணியாளர்கள் | தேவைப்படும் பணியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| மேல்நிலை தொட்டிகள், தரைமட்ட தொட்டிகள் மற்றும் குடிநீர் பகிர்மான குழாய்கள் தொடர்புடைய பணிகள் | 1 லட்சம் லிட்டர் கொள்ளவு கொண்ட தொட்டி 4 இருப்பிடத்திற்கு பராமரிப்பு உதவியாளர் – 1 | 0 | 0 |
| | 2 லட்சம் லிட்டர் கொள்ளவு கொண்ட தொட்டி 4 இருப்பிடத்திற்கு பராமரிப்பு உதவியாளர் – 1 | 0 | 1 |
| மேல்நிலை தொட்டிகள், தரைமட்ட தொட்டிகள் மற்றும் குடிநீர் பகிர்மான குழாய்கள் தொடர்புடைய பணிகள் | 2 லட்சம் லிட்டர் முதல் 5 லட்சம் லிட்டர் கொள்ளவு கொண்ட தொட்டி இருப்பிடத்திற்கு பராமரிப்பு உதவியாளர் – 2 | 0 | 6 |
| | 5 லட்சம் லிட்டருக்கு அதிகமான கொள்ளவு கொண்ட தொட்டி இருப்பிடத்திற்கு பராமரிப்பு உதவியாளர் – 3 | 2 | 4 |
| பகிர்மான குழாய்கள் இல்லாத பகுதிகளில் லாரிகள் மூலம் குடிநீர் வழங்கல் | ஓட்டுநர் – 2 | 0 | 2 |
| | துலக்குநர் –2 | 2 | 0 |
| நீரேற்று நிலையத்தை இயக்கி பராமரித்தல் | மின்னாளர் –3 | 0 | 3 |
| | பராமரிப்பு உதவியாளர்–3 | 2 | 1 |
| குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் இயக்கி பராமரித்தல் | மின்னாளர் –3<br>பராமரிப்பு உதவியாளர் –3<br>நீர் பகுப்பாய்வக உதவியாளர் –1 | 0 | 0 |
| பூஸ்டர் நிலையம் | பராமரிப்பு உதவியாளர் –2 | 0 | 0 |

எனவேசிதம்பரம் நகராட்சி வக்காரமாரி தலைமை நீர்த்தேக்கத்தில் இருந்து நகர் பகுதிக்கு சீரான குடிநீர் வழங்கும் பொருட்டு இணைப்பு படிவத்தில் குறிப்பிட்டுள்ள அளவுகோலின் படி மேற்கொள்வதற்கு நிரந்தர பணியாளர்கள் இல்லாத நிலையில் வெளிக் கொணர்வு முகமை (Out Source) மூலம் அட்டவணையின்படி பணியாளர்கள் தேவையாக உள்ளது.

எனவே மேற்கூறிய பட்டியல்படி உள்ள செலவினத்தில் அரசு விதிமுறைகள்படி மேற்கொள்ள வேண்டிய ESI, EPF, GST மற்றும் TNMLF செலவின விபரங்களுடன் ஓராண்டிற்கு ஆகும் மொத்த செலவினம் ரூ.47.56/ லட்சம் ஆகும். எனவே, தற்போதைய அரசு நெறிமுறைகள்படி நடப்பில் உள்ள 6 பணியாளர்கள் தவிர கூடுதலாக 17 வெளிமுகமை பணியாளர்களை கொண்டு சிதம்பரம் நகராட்சியின் குடிநீர் மற்றும் விநியோக பணிகள் நடைபெறவும் இதற்கான உத்தேச

மதிப்பீட்டு செலவினம் ரூ.47.56 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறுவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு பிரேரணை அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

**1)** மன்றம் அனுமதிக்கலாம்.

**2)** அரசிடம் உரிய அனுமதிகள் பெற்று நிதியுதவி பெறுவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்களுக்கு முன்மொழிவுகள் சமர்ப்பிக்கலாம்.

**ந.க.எண்:882/2017/இ1**

**26)** இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பணிபுரியும் நிரந்திர தூய்மை பணியாளர்கள், தூய்மை பணி மேற்பார்வையாளர்கள், ஓட்டுனர்கள் மற்றும் அலுவலக உதவியாளர்கள், பொறியியல் பிரிவில் பணிபுரியும் பணியாளர்களுக்கு **2021**ம் ஆண்டுக்கு தீபாவளி பண்டிகைக்கான சீருடைகள் அரசு நிறுவனத்தில் கொள் முதல் செய்துக்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.**3,00,000/–**த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

அவசர அவசியம் கருதி அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 2809/2021/எச்1**

**27)** சிதம்பரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் 21 பேட்டரி வாகனங்கள் மற்றும் 7 இலகுரக வாகனங்கள் 4 டிராக்டர் வாகனம் 1 டிப்பர் லாரியும் உள்ளது. தற்சமயம் 8 பேட்டரி வாகனங்கள் பழுதடைந்துள்ளது. 3 இலகுரக வாகனங்கள் தகுதி சான்று முடிவடைய உள்ளதால் ,இவற்றை புதுப்பிக்கும் பொருட்டு 08.05.2021-ல் கடலூர் பணிமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டது. மேலும் தற்சமயம் கோவிட்-19 வைரஸ் தொற்று இரண்டாம் அலை உள்ளதாலும் ஒரு டிப்பர் லாரியில் கிருமி நாசினி எந்திரம் பொருத்தப்பட்டு கொரோனா தடுப்பு பணி மேற்கொள்ள உள்ளதாலும் அவசர அவசியம் கருதி குப்பை சேகரிக்கும் பணி தொய்வின்றி நடைபெற டிராக்டர் வாகனம் வாடகைக்கு அமர்த்திக்கொண்டு பணி மேற்கொள்ளப்பட்டதற்கான செலவினம் ரூ.1,66,356/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**:

அவசர அவசியம் கருதி பணி மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 948/2020/எச்1**

**28)** சிதம்பரம் நகராட்சிக்கு சொந்தமான சின்ன செட்டி தெருவில் அமைந்துள்ள இளநிலை பொறியாளர் குடியிருப்பு கட்டிடம், பயன்படுத்த முடியாத நிலையில் பூட்டப்பட்டு உள்ளதால் கட்டிடம் பழுதடையும் நிலையில் உள்ளது.

எனவே இந்த கட்டிடத்தினை இளநிலை பொறியாளரின் மாத அடிப்படை ஊதியத்தில் 3 சதவீகிதம் மற்றும் வீட்டு வாடகை படி அடிப்படையில் ரூ.4934/– (1734+3200) நிர்ணயம் செய்து ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் மூலம் கட்டிடத்தை வாடகைக்கு விட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1) மன்றம் அனுமதிக்கலாம்

2) நகராட்சி வருவாய் வருவதற்கு வாய்ப்புள்ளதால் மன்ற அனுமதியை எதிர்நோக்கி நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 2671/2021/அ1**

**இடம்: சிதம்பரம்**
**நாள்: 29.10.2021**

**தனி அலுவலர்,**
**சிதம்பரம் நகராட்சி**